கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.
அ.வ.எண்.290/2018
நாள். 19.06.2026

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 19.06.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

================================================================

| | |
|---|---|
| பெயர் = திரு.பொன்முத்துராமலிங்கம், திருச்சி மேற்கு சார் ஆய்வாளர் | தகப்பனார் பெயர் = திரு.சின்னராசு |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

================================================================

**PW2 மு.வி**

1) நான் தற்போது திருச்சி மேற்கில் நில அளவை பிரிவில் சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.3 புல வரைபடம் என்னால் வழங்கப்பட்டதா என்றால் நான் வழங்கிய புல வரைபடத்தின் அசல் பி.சா.ஆ.3 அல்ல, ஆனால் அதன் நகல் தான் பி.சா.ஆ.3, மேலும் பி.சா.ஆ.3 புல வரைபடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், மேலும் அதில் இடதுபுறத்தில் உள்ள பழுப்பு மற்றும் நீல வண்ண கட்டங்கள் அருகில் உள்ள வாசகங்களை நான் தான் எழுதினேன், ஆனால் பழுப்பு மற்றும் நீல வண்ண கட்டங்களில் உள்ள வண்ணங்களை நான் போடவில்லை.

2) பி.சா.ஆ.3 புல வரைபடத்தில் கண்ட புல எண் 318/33 பொது தெருவை அளவீடு செய்வதாக இருந்தால் முழுவதுமாக அளவீடு செய்து அதில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் கண்டறிந்திருப்போம் என்றால் தெரு முழுவதையும் அளக்கவில்லை, புல எண் 318/33 பொது தெருவின் வடபுறம் உள்ள புல எண் 318/36 மட்டுமே ஆக்கிரமிப்பு தொடர்பாக மனு செய்ததன் பேரில் அளக்கப்பட்டது.

3) வா.சா.ஆ.9 ஆவணமான, இலால்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.325/2017 வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள நில அளவையர் வரைபடம் என்னால் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. இலால்குடி வட்டாட்சியர் கொடுத்த குறிப்பாணை பி.சா.ஆ.2 ன் அடிப்படையில் தான் நான் புல எண்.318/33 தெருவினை அளவீடு செய்தேன் என்றால் மேற்படி குறிப்பாணையில் உள்ள நீதிபேராணை மனு எண்.17386/2022 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவின் பேரிலே அளவீடு செய்தேன்.

4) பி.சா.ஆ.2 குறிப்பாணையின் பேரில் தான் அளவீடு செய்யப்பட்டு பி.சா.ஆ.3 வரைபடத்தை நான் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல, மேற்படி நீதிபேராணை மனு உத்தரவின் பேரில் நான் அளவீடு செய்து, பி.சா.ஆ.3 வரைபடத்தை வட்டாட்சியரிடம் சமர்ப்பித்தேன், மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் வட்டாட்சியர் பி.சா.ஆ.2 குறிப்பாணையை புள்ளம்பாடி செயல் அலுவலருக்கு வழங்கியுள்ளார்.

5) மேற்படி நீதிபேராணை மனு உத்தரவின் பேரில் புல எண்.318/36, 37 நிலங்களை அளவீடு செய்தேன் என்றால் மேற்படி நீதிபேராணை மனு உத்தரவை பார்த்தால் தான் தெரியும்.

## குறுக்கு விசாரணை

1) நான் நில அளவையர் என்ற முறையில் பொதுவாக ஒரு இடத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா இல்லையா என்பதை அறிய புல படத்தை கொண்டு அதன் அருகில் உள்ள நிலங்களையும் அளவீடு செய்து அறியப்படும் என்றால் சரிதான். ஒரு சர்வே இடத்தை எவ்வாறு அளப்பேன் என்றால் சர்வே கல் இருந்தால் அதிலிருந்து அளவீடு செய்யப்படும், கல் இல்லாதபட்சத்தில் நிலையான அமைப்பிலிருந்து அளவீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு உட்பிரிவின் அளவுகளும் சரிப்பார்க்கப்பட்டு அளவீடு செய்யப்படும்.

2) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை நீதிபேராணை மனு எண்.17386/2022 ல் பிறப்பித்த உத்தரவின் பேரிலே புலஎண். 318/33 தெருவினை அளந்தேனா என்றால் மேற்படி நீதிபேராணை மனு உத்தரவை பார்த்தால் தான் தெரியும். பி.சா.ஆ.3 புலவரைபடத்தில் உள்ளபடி ஆக்கிரமிப்புகளின் அளவுகள் நான் கொடுத்ததா என்றால் ஆக்கிரமிப்புகளின் அளவுகள் நான் கொடுத்தது தான், ஆனால் அதில் உள்ள வண்ணம் நான் தீட்டியது அல்ல.

3) பி.சா.ஆ.3 வரைபடத்தை நான் வட்டாட்சியரிடம் சமர்ப்பித்தேன், மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் வட்டாட்சியர் பி.சா.ஆ.2 குறிப்பாணையை புள்ளம்பாடி செயல் அலுவலருக்கு வழங்கியுள்ளார் என்றால் சரிதான்.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2026.06.20 04:39:06 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.